| Scale | Gm | Tempo | 98 | Style | Latin> Disco Latin |
|---|---|---|---|---|---|

31. இயேசுவின் இரத்தம் ஜெயம்

இயேசுவின் இரத்தம் ஜெயம் ஜெயம்
கழுவிடும் பாவங்கள் தினம் தினம்
சத்ருவை மேற்கொள்ள பெலன் தரும்
கல்வாரிக்கு ஓடி வா !!

1

பாவ மன்னிப்புக்காக சிந்திய
புது உடன்படிக்கையின் இரத்தம் (மத் 26:28)
சாபத்திலிருந்து மீட்டுக்கொண்டுவிட்ட (கலா 3:13)
மாசற்ற கிறிஸ்துவின் இரத்தம்
குற்றமில்லாதது அது விலையேரப்பெற்றதுவே(1பேதுரு 1:19)
பாவங்கள் நீக்கி நம்மை
சுத்திகரித்திடுமே (1யோவான் 1:7)

2

ஆபேலின் இரத்தம் பேசினதைவிட
நன்மையே பேசிடும் இரத்தம் (எபி 12:24)
கோபாக்கினைக்கு நீங்கலாக்கி நம்மை
நீதிமான்கள் ஆக்கும் இரத்தம் (ரோம 5:9)
பரிசுத்தம் செய்திடும், நமக்காய் பரிந்து பேசும் (எபி 13:12)
செத்த கிரியைகளில் இருந்து
சுத்திகரித்திடுமே (எபி 9:14)

3

இராஜாக்களாக்கி ஆசாரியராக்கி
பூமியை அரசாளச் செய்யும் (வெளி 5:10)
பூலோகத்திலும் பரலோகத்திலும்
யாவையும் ஒப்புரவாக்கும் (கொலோ 1:20)
சமாதானம் தந்திடும், தைரியம் தந்திடும் (எபி 10:20)
தேவனிடத்தில் நம்மை
கிட்டிச் சேர்த்திடுமே (எபே 2:13)